உ

வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 4 **August 1942** No. 8

242

விஷய சூசிகை.	பக்கம்
வைத்தியச்செய்தி	1
ஔஷதசாரம் (பண்டிட் நாராயணய்யங்கார்)	104-107
பலவகை ஷை.	49-56
சுதேச வைத்தியம் (டாக்டர் Dr. K. [illegible] அவர்கள்)	1—3
ஹிருதயம் (பத்திராதிபர்)	3—9

சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—
உள் நாட்டிற்கு ரூ. 2
வெளிநாட்டிற்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
,, ,, ½-க்கு ரூ 4
,, ,, ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—

Pandit, S. NARAYANA IYENGAR.

Editor and Publisher.

No. 2, Police Station West Lane, Madura.

[விலை **0—3—0**

வைத்தியச் செய்தி,

திருச்சி ஆயுர்வேத சபா

மேற்படி சபாவின் மாதாந்திரக்கூட்டம் திருச்சி ஆயுர்வேதிய யூனியன் கட்டிடத்தில் 26—7—42 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-15-மணிக்கு கூடிற்று ஸ்ரீமான் V. B. நடராஜசாஸ்திரிகள் ஆர்யுவேதாசார்யா அவர்கள் தலைமை வகித்தார்கள். L, S. கணேசன் L. I. M. அவர்கள் **ஸ்வேதவிதி** என்பதுபற்றி ஓர் வியாசம் எழுதிப்படித்தார். மாலை 7-மணிக்கு சர்ச்சையுடன் கூட்டம் முடிவுற்றது.

V. R. Subramanya Aiyar,
காரியதரிசி.

209. கிருததைலபாகம்:—அடபொதியன் கிழங்கு, மஞ்சிஷ்டி, மரமஞ்சள், கம்பில்லகம், எருக்கம்பால், மயில்துத்தம், வகைக்குத் தோலா இரண்டு, நெய், நல்லெண்ணெ, வகைக்குச் சின்னப்படி அரை, ஜலம் சின்னப்படி இரண்டு சேர்த்துப் பதமாகக் காய்ச்சி வடித்து அதில் வெள்ளைக்குங்கிலியம், தேன்மெழுகு வகைக்குத் தோலா இரண்டு சேர்த்துப் பத்திரப்படுத்தி மேலுக்கு உபயோகிக்கவும். பித்தவெடி முதலிய நோய்கள் தீரும். குறிப்பு:—அடபொதியன் கிழங்கு முதலிய ஆறு சரக்குகளில் எருக்கம்பால் நீங்கலாக மற்றவைகளை இடித்துப் பொடிசெய்து வஸ்திரகாயம் செய்து சேர்க்கவேண்டும். எருக்கம்பாலை நிறுத்து எடுத்துக்கொள்ளவும். நல்லெண்ணெக்குப் பதிலாக கடுகு எண்ணெ எடுத்துக்கொள்வது வழக்கம். தைல பதத்தில் எடுத்து வடிகட்டி உடனே தைலம் நல்ல சூடாக இருக்கும்போதே தேன்மெழுகை (இதையே வெள்ளை மெழுகு என்பர்) யும் போட்டு வெள்ளைக்குங்கிலியத்தையும் பொடி செய்து போடவும். எண்ணெயின் சூட்டில் மெழுகும் வெள்ளைக் குங்கிலியமும் கரைந்து ஒன்று சேர்ந்து விடும். கம்பில்லம் என்பது செங்கல்பொடி போன்ற ஓர் கடைச்சரக்கு. இது வடதேசத்தில் கிடைக்கும். மலையாளத்தில் கம்பிப்பாலை என்ற ஓர் சரக்கைச் சேர்க்கின்றனர். கம்பில்லகத்தின் லக்ஷணம் கம்பிப்பாலையில் காணப்படவில்லையாதலால் மலையாள தேசத்தில் கையாளப்படுவது சாஸ்திரரீதிக்கு ஒத்ததாகாது.

210. ஸிக்தகாதி:—கடுகு எண்ணெ சின்னப்படி அரை, சுத்த ஜலம் சின்னப்படி இரண்டு, சேர்த்து அதில் வெள்ளைமெழுகு, ஈயச் சிந்தூரம், குக்கில், மயில் துத்தம், ரஸாஞ்சனம், இவை வகைக்குத் தோலா $1\frac{5}{8}$ எடுத்துப் பொடிசெய்து போட்டுத் தைலபதமாகக் காய்ச்சி மேலுக்கு உபயோகிக்க சொறி, அரிப்பு, முதலியன தீரும். குறிப்பு:—வெள்ளை மெழுகு, நீங்கலாக மற்றவைகளைப் பொடி செய்துகொள்ளவும். ஈயச்சிந்தூரம் என்பது கடைச்சரக்கு, குக்கிலைத்தண்ணீர்விட்டரைத்துப் போடவும். ரஸாஞ்சனம் என்பது செயற்கைச்சரக்கு. அதை அப்படியே போடவும். தைலத்தை...

பதத்தில வடித்துத் தைலம் நல்ல சூடாக இருக்கும்போதே வெள்ளைமெழுகை அதில் போட்டால் உருகி தைலத்துடன் கலந்து விடும்.

வாதரோகங்கள்.

211. கல்யாணலேஹம்:—மஞ்சள், வசம்பு, கோஷ்டம், திப்பிலி, சுக்கு, ஜீரகம், ஓமம், அதிமதுரம், இந்துப்பு, ஆக இந்த ஒன்பது சரக்குகளையும் சமயிடையாக எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்து அதில் அரைத்தோலா பொடியை நெய்விட்டுக் குழைத்து தினம் உபயோகிக்கவும். சீர்கெட்ட நாக்கின் நரம்புகள் முறுக்கேறி பேசும் திறமை அதிகப்படும்.

212. யோகேந்திர ரஸம்:—ரச சிந்தூரம் தோலா இரண்டு ஸுவர்ணச் சிந்தூரம், காந்தச் சிந்தூரம், அப்பிரகம் முத்துபஸ்மம் வங்கபஸ்மம், வகைக்குத் தோலா ஒன்று, இவைகளைக் கல்வத்திலிட்டு குமரிச்சாற்றில் அரைத்து அதை மூன்றுநாள் தானிய புடம் வைத்து இரண்டு குன்றுமணியளவு மாத்திரைகளாக உருட்டிக்காயவைத்து பத்திரப்படுத்தி வேளைக்கு ஒரு மாத்திரை தகுந்த அனுபானத்தில் சாப்பிட வாதநோய்கள் போம்.

213. ரஸராஜ ரஸம்:—ரஸபஸ்மம் தோலா நான்கு, அப்பிரகச்சிந்தூரம் தோலா ஒன்று, சுவர்ணச் சிந்தூரம் தோலா அரை இவைகளைக் கல்வத்திலிட்டு குமரிச்சாற்றில் அரைத்துப் பிறகு அயச்சிந்தூரம், வெள்ளிபஸ்மம், வெள்வங்க பஸ்மம், அமுக்கரா கிராம்பு, ஜாதிக்காய், க்ஷீரகாகோலி, வகைக்குத் தோலாகால்சேர்த்து மணத்தக்காளி ரஸம் விட்டு அரைத்து ஐந்து குன்றிமணியிடை மாத்திரைகளாக உருட்டிக் காயவைத்து வேளைக்கு ஒரு மாத்திரையை பால் அல்லது பானக ஜலம் அனுபானத்தில் சாப்பிட வாத நோய்கள போகும்.

214. பலாரிஷ்டம்:—குறுந்தொட்டி, அமுக்கரா, வகைக்குத் தோல 400, இடித்து 128 சின்னப்படி ஜலம்விட்டு 32 படியாக வற்றவைத்து வடிகட்டி அதில் சர்க்கரை தோலா 1200 சேர்த்து

அதில் காட்டாத்திப்பூ தோலா 64, கூீரகாகோலி தோலா 8, ஆமணக்குவேர் தோலா 8, அரத்தை, ஏலம், முதியார் கூந்தல் கிராம்பு, விலாமிச்சவேர், சிறுநெருஞ்சி, வகைக்குத் தோலா நான்கு இடித்துப் பொடிசெய்துபோட்டு பானையின் வாய்மூடி ஒரு மாதம் வைத்திருந்து பிறகு வடிகட்டி வேளைக்கு ஒரு அவுன்சு வீதம் சாப்பிட்டுவர வாதநோய்கள் தீரும்.

215. யோகராஜ குக்கலு:—கொடுவேலி, தேசாவரம், ஓமம், கருஞ்ஜீரகம், வாய்விளங்கம், காட்டு ஓமம், ஜீரகம், தேவதாரு, செவ்வியம், ஏலம், இந்துப்பு, கோஷ்டம், அரத்தை, சிறுநெருஞ்சி, மல்லிவிதை, திரிபலை, கோரைக்கிழங்கு, திரிகடு, கருவாப்பட்டை, விலாமிச்சவேர், யவக்ஷாரம், தாளிசபத்திரி, பச்சிலை, ஆக மொத்தம் சரக்குகள் 27. இந்தச் சரக்குகளைச் சமயிடையாக எடுத்து இடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு குக்கில் தோலா 27 சேர்த்துக் கலந்து அரைத்து நெய்விட்டுப் பிசைந்து கொண்டு கால்தோலா அளவு மாத்திரைகளாகச் செய்து வேளைக்கு ஒரு மாத்திரை சாப்பிட வாதநோய்கள் ஆமவாதம் போம். குறிப்பு:-27 சரக்குகளைப் பொடிசெய்து கொண்டு பிறகு குக்கிலைக் கல்வத்திலிட்டுப் பசுநெய் விட்டு அரைத்துக் கொஞ்சம் கொஞ்சமாக ஷை பொடியைத்தூவித் தூவி அரைத்து இவ்விதம் அந்தப்பொடி முழுவதும் குக்கிலில் நன்றாகக்கலப்பதற்குத்தேவையான நெய்யைவிட்டுக்கொள்ளவேண்டும். இவ்விதம் நூல்களில் காணப்பட்டபோதிலும் இவ்விதம் செய்வதில் குக்கிலும் மருந்துப்பொடியும் நன்றாகக் கலக்கமுடியாமல் போய்விடுகின்றது. ஆகவே குக்கிலை ஓர் இரும்பு பாத்திரத்தில் போட்டு அடுப்பேற்றித் தேவையான ஜலம்விட்டுக் காய்ச்சினால் ஜலத்தில் குக்கில் நன்றாகக் கரைந்துவிடுகின்றது. அப்பொழுது ஷை பொடியைப்போட்டுக் கிளரிக்கொடுக்க மருந்துமுழுவதும் கலந்துகொள்ளுகிறது. இதுவே நாம் செய்யும் முறை.

216. யோகராஜகுக்கலு:—சுக்கு, தேசாவரம், திப்பிலி, செவ்வியம், கொடுவேலி, வறுத்த பெருங்காயம், ஓமம், கடுகு, ஜீரகம், கருஞ்ஜீரகம், அரேணுகம், வெப்பாலையரிசி, மலைதாங்கிவேர், வாய்விளங்கம், யானைத்திப்பிலி, கடுகுரோகிணி, அதிவிடயம், சிறுதேக்கு,

வசம்பு, மருள்வேர், இவை வகைக்குத்தோலா கால், திரிபலை தோலா பத்து (திரிபலை மூன்று சரக்குகளும் சேர்ந்து மொத்தம் தோலா பத்து) குக்கில் தோலா 15, வெள்வங்கம், வெள்ளி, கருவங்கம், கிட்டம் இதுவே மண்டூரமெனப்படும்) அப்பிரகசிந்தூரம், அயச்சிந்தூரம், ரஸபஸ்மம், ஆகிய இவை வகைக்குத்தோலா 4 சேர்த்து கால்தோலா இடையுள்ள மாத்திரைகளாகச் செய்து வேளைக்கு ஒரு மாத்திரை உபயோகிக்க வாதநோய்கள் தீரும். ராஸ்நாதி கஷாயத்தின் அனுபானத்தில் சாப்பிட வாதநோய்களும், மரமஞ்சள் கஷாய அனுபானத்தில் பிரமேகங்களும், சீந்தில் கஷாய அனுபானத்தில் வாதரக்தமும் திரிபலா கஷாயத்தில் நேத்ரரோகங்களும் போம். குறிப்பு:—குக்கிலை ஜலம்விட்டு அடுப்பில் கொதிக்கவைக்கக்கரையும் நன்றாகக் கரைந்தபிறகு எழு சிந்தூரங்களையும் மருந்துப்பொடியையும் நன்றாகக் கலந்து அதை அந்தக் குக்கிலில் தூவிக்கொடுத்துக் கிளரிவர மருந்து முழுவதும் நன்றாகக்கலக்கும். பிறகு கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து மாத்திரை உருட்டவும். பெருங்காயம் என்பது வெள்ளைப்பெருங்காயம் அதைக் கட்டியாக நெய்யில் போட்டு அடுப்பேற்றி பொரித்து எடுத்துக்கொள்ளவும்.

217. கைசோர குக்கலு:—திரிபலை வகைக்குக் தோலா 64, சீந்திற்கொடி தோலா 64, இவைகளை இடித்து ஓர் இரும்பு பாத்திரத்தில் போட்டு அதில் ஜலம் சின்னப்படி 48 விட்டுக் கஷாயம் செய்து 24 படியாக வற்றவைத்து வடிகட்டி அதில் குக்கில் தோலா 64 சேர்த்து (இரும்பு பாத்திரத்தில் சேர்த்து) மறுபடியும் அடுப்பேற்றி துடுப்பால் கிளரிக்கொடுத்து ஜலம் வற்றி பாகுபோல் பதம் வரும் சமயத்தில் திரிபலை வகைக்குத் தோலா 2½, சீந்தில் தோலா நான்கு, திரிகடு வகைக்குத் தோலா இரண்டு, வாய்விளங்கம் தோலா இரண்டு, தந்தி தோலா ஒன்று, சிவதை தோலா ஒன்று, இவைகளை இடித்துப் பொடிசெய்து போட்டுக் கலந்து கால்தோலா மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொண்டு வேளைக்கு ஓர் உருண்டை சாப்பிட வாதநோய்கள் தீரும்.

218. ராஸ்நாதி கஷாயம்:—அரத்தை, செங்கொட்டி, குருந்தொட்டி, ஆமணக்குவேர், தேவதாரு, பூலாங்கிழங்கு, வசம்பு, ஆடா

சுதேச வைத்தியம்.

(மதுக்கூர் டாக்டர் K. ஷாரோர்டி அவர்கள்)

மேலும் இப்பண்டைக்கால வைத்தியத்தைப்பற்றி நவீனகால ஆராய்ச்சிக்காரர்களால் பெருமையாகக் கூறப்பட்ட பல வார்த்தைகளை விரிவுபற்றி இந்த எழுதிக்காண்பிக்கத் தயங்குகிறேன்.

இந்நூலில் குறிப்பிட்டுள்ள சுகாதார முறைகள் வியாதிகளை வரவொட்டாது தடுப்பனவைகள் மட்டிலல்லாது இவ்வுலகில் சௌக்யத்தை அடைவதுடன் மறுவுலகிலும் நன்மைகளை விளைவிக்கின்றனவென்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. நவீன நாட்களில் வருமுன் காப்பு விதிகளில் அவ்விதிகளின் சிறு பாகங்களைமட்டில், ஈடுபடுத்திக்கொள்கிறார்களே தவிர வேறு இல்லை. உதாஹரணமாக ஆகாரம், காற்று, தண்ணீர், உடை, வாஸம், வீடு, தேகம், முதலியவைகளைச் சுத்த நிலைமைகளில் வைத்துக்கொள்ளல் வேண்டுமென்று மட்டில் கூறுகிறார்கள். ஆனால்வெளிப்படவுள்ள நடை-உடை பாவனைகளில் கவனம் செலுத்துவதைக் காணோம். மேற்கூறிய வஸ்துக்களின் ஒழுங்கு நிலைமைக்கு எடுத்துவரும் நாகரீக முறைகள் குறைகளாகவே காணப்படுகின்றன. அந்நாட்கள் நூலில் அதிகாலையில் விழித்தல், பின்னர் மலஜலங்களைக் கழிக்க, ஊர்கள் முச்சந்தி நாற்சந்திகள், நடைபாதைகள், ஆறு, குளம், கிணர், கோயில், புற்று, சுடுகாடு, நடமாடுமிடங்கள் முதலியவைகளை பகுதூரத்தில் விலக்கி முன்னமே தயாரித்து வைத்துள்ள ஜலத்தினால் மண் ஸம்பந்தமாய்க் கைகால் சுத்தம்செய்தல், பல் துலக்குதல், அஞ்சன நஸ்யங்கள், தேகப்பயிர்ச்சிகளுக்குப்பின் ஆசாரவிதிகள், போஜன்காலங்கள் தம் முறைகள் பின் காரியங்கள், தினசரியை, ருது சரியா நடவடிக்கைகள் ஆகிய இவை முக்கிய சுகாதார முறைகளாகும். நவீன முறைகளில் இவ்வித உறுதிகளில்லாது தத்தம் சௌகரியத்திற்குத்தக்கபடி செய்துகொள்வதே முறையாவதோடு மல ஜலங்களைக் கழிக்க விசேஷமாகப் பட்டிணங்களில் கக்கூஸ்களை தயாரித்து அப்பலவற்றிலுள்ள மலஜலங்களை அன்றாடமோ அடிக்கடியோ அப்புறப்படுத்தி வெளியில் சமீபவிடத்தில் குவித்துவர அழுகிவிட நேர்ந்துவரும் அவ்வாபாஸங்களிலின்று முண்டாய்வரும் கிருமிப்

பூச்சிகள் பல்ரூபத்தில் வெளியேறி வாயுமார்க்கமாகப் பக்க வாஸஸ் தலங்களை அடைந்துகொள்வதால் அந்த வயப்போர்க்குப் பலவித தொந்திரவுகளை விளைவித்து வருகின்றன. தனிமையிலிருக்கும் மல ஜலங்கள் வெய்யிலினாலும் காற்றினாலும் உலர்ந்து போவதால் பூச்சிப்புழுக்காது நடுப்பதால் கிராமவாஸிகளே அடைய ஹேது விராததால் பட்டிக்காடுகளில் பிணிக்குறைவுகளை நாம் கண்டறிகின்றோம். இதுபோல் மற்றும் பல சுகாதார முறைகளின் வேற்றுமைகளும் தெரியக்கூடியவைகளே.

ஆகாரம் ஸம்பந்தப்பட்டவரையில் ஏராளமான நிலைமைகளைக் கவனிக்கவேண்டும். காலதேச வர்த்தமானப்படி அதுகளில் உற்பத்தி வளர்ச்சி, சேர்க்கை, தயாரித்தல் குருலகுத்தன்மைகள், பத்தியா பத்திய விசாரங்கள், ஜீர்ண விசாரணைகள் யோக்யா போக்யத் தன்மைகள் முதலிய அபாரமான வாலாறுகளைக் கவனித்து (விஸிருஷ்டே விண்மூத்ரே) என்ற விதிப்படி தகுந்த காலத்தில் தான் செய்துகொள்ளவேண்டுமேயன்றி வேறு நினைத்தபோது செய்தல் கெடுதலாகுமென்றே விளக்கியிருக்கிறது. இதன் விவரத்தைத் தெரிய விரும்புவோர்கள் இந்நூல்களைப் பரிசீலனைசெய்து கொள்ள வேண்டியதே இம்முறைகளில் கூறியுள்ள தண்ணீர், காற்றுக்களின் ஒழுங்குத்தன்மைகளை விரிவாய் இந்நூல்களில் கூறியிருப்பதையும் தெரிந்துகொண்டால் இந்நாட்களின் முறைகளைவிட அந்நாட்களின் முறைகள் மிகச்சிறந்தவைகளென்று புலப்படும். இவைகளின் தனித்தனி விவரணை மிகு சாத்யமாகாததால் இத்துடன் நிறுத்துகின்றேன. மேலும் (இஹாயத்தமைஹிகமா முஷ்மிகஞ்ச ச்ரேய:) என்று கூறியுள்ளபடி ஒவ்வொரு விதிகளையும் விலக்குகளையும் உணர்ந்து நடக்கவேண்டும். 'ஹிம்ஸை, திருட்டு, பேராசை, கோள் சொல்லுதல், கடும்பேச்சுகள், பொய்ச்சொல் முதலிய கொள்கைகளை விட்டுவிடவேண்டும். ஏழைகளை உதவிபுரியவேண்டும். எல்லோரையும் ஸமமாகப் பாவிக்கவேண்டும். மேல்பட்டவர்களைப்பணியவேண்டும். கடவுளைப் பிரார்த்திக்கவேண்டும். இந்திரியநிரோகங்களைக்கெடுக்கும் வேலைகளைச்செய்தல் கூடாது, அகாலத்தில் தனிமையாகக் கோவில் தேவதாஸ்தானங்கள் ஸ்மசானங்

கள் குப்பைகள் முதலியவைகளை யணுகக் கூடாது. நதியில் நீஞ்சுவது நெருப்புஜ்வாலையைத் தாண்டுவது ஸந்தேகப்பட்ட தோணி மரம் முதலியவைகளிலேறுவது முதலியவைகளை விரும்பவும் கூடாது மத்ய விக்ரயாதிகள் பரஸ்திரீ கமனாதிகள் முதலிய பல வேறு விஷயங்களையும் அவச்யம் விலக்குதல் வேண்டும். மற்றும் பல விஷயங்களையும் இங்கு கவனிக்குமாயின் அவச்யம் இவ்விரு வுலகங்களிலும் சௌக்யத்தை அடையுமென்பதில் சந்தேகமே கிடையாது." ஆகையால் இந்நூலின் கொள்கைகளைக் கையாடுமாகில் இந்நாட்களில் உண்டாகிக்காணும் பல பிணிகளை வரவொட்டாது தடுத்துவிடலாமென்று உறுதிகொள்ளத் தயங்க வேண்டியதில்லை. ஏற்கனவே கூறியுள்ளபடி பொதுவாகச் சுகாதார முறைகளைக் கூறியிருப்பதோடு ப்ரத்யேகமான விதிகளையும் சிற்சில விடங்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. வியாதிகளின் காரண விவரணங்களில் பலவிடங்களிலும் கூடியமட்டில் தடுக்குமுறைகளையும் கூறப்பட்டுள்ளதைக் கண்டறியலாம். ஆகையால் சுகாதார முறைகளின் விளக்கம் இவ்வைத்திய முறையில் மிகச்சுருக்கமென்ற ஆக்ஷேபணை இதற்கு ஒவ்வாததே விபரீதமாக நவீன முறைகளில் தான் அதிகக்குறைவென்று அறிதல் நியாயமே. வேண்டியமட்டில் தனித்தனிப் பிணிகளின் நிதானம், பூர்வரூபம், ரூபம் உபசயம், ஸம்ப்ராப்தி ஆகியவற்றைத் தெளிவுபடுத்தியுள்ளதே இவ்வைத்யமாகும் வியாதிகளின் வகுக்கல்கள் வேற்றுமைகள் முதலியன காலதேசவர்த்தமானப்படிக்குள்ளபடி சொல்லப்பட்டுள்ளன. உதாஹரணமாய் முதலாவதாக ஜ்வரத்தைப்பற்றி யோசித்துக்கொள்வோம்.

ஹிருதயம் (பத்திராதிபர்)

(முன் சந்திரிகை தொடர்ச்சி)

ஸந்திக்தார்த்தமான கப்யாஸபதமும்வெளுப்பு என்ற அர்த்தத்தைப் போதிப்பதில்தான் ஔசித்யம் காணப்படுகின்றது. வெளுப்பான ஆஸனம் கிடையாதென்பதை யார் உறுதிகூறமுடியும். ஆகவேஇந்த வாக்யமும் அதற்கு பாஷ்யம் எழுதியுள்ள பெரியோர் வாக்யமும் புண்டரீக பதத்திற்குச்சிகப்புத்தாமரை என்றே அர்த்தமெனநமக்கு

விளக்குகின்றது. மேலும் பூர்வமீமாம்சை ஒன்பதாவது அத்தியாயம் மூன்றாவது பாதத்தில் "ஜாதி நைமித்திகம் யதாஸ்தானம்," என்ற ஸூத்ர பாஷ்யத்தில "தர்பைஸ் திருணீதேஹரிதை; என்ற வாக்ய விவரணத்தில் "ஸுவர்ணத்ரவ்யம் புண்டரீகம் என்றும்" லௌகிக வ்யக்த சப்த:" என்றும் சொல்லியிருப்பதால் ஸ்ரீசபர ஸ்வாமியும் புண்டரீக சப்தத்திற்குச் சிகப்புத்தாமரை என்ற பொருள் கொண்டிருப்பது புலப்படுகின்றது. "க: புண்டரீகநயந:" என்ற இது முதலிய லௌகிகமான மகாகவிப்பிரயோகங்களிலும் புண்டரீக பதம் சிகப்புத்தாமரையைக் குறிக்கின்றதென்பது வியக்தம்.

மேலும் நமது முன்னோர்கள் சந்தேகத்திற்கு இடமின்றி ஹிருதயம் என்ற உறுப்பை வியக்த வசனங்களால் காட்டியுள்ளார்கள். அஷ்டாங்க ஹிருதயம் ஸூத்ரஸ்தானம் 12-வது அத்தியாயத்தில் 16-வது சுலோக வியாக்யானத்தில் அருணதத்தர் கூறுவதாவது:—

ஹிருதயம் மனஸஸ்ஸ்தானம் ஓஜஸ: சித்திதஸ்ய ச |
மாம்ஸ பேசீமயம்ரக்த பத்மாகார மதோமுகம் |
யோகினோ யத்ர பச்யந்தி ஸம்யக் ஜ்யோதி: ஸமாஹிதா: |
ரஸோ ய: ஸ்வச்சதாம் யாத: ஸதஸ்ரைவாவதிஷ்டதே |
ததோ வ்யானேந விக்ஷிப்த: க்ருத்ஸ்நம் தேஹம் ப்ரபத்யதே ||

இவ் வசனங்களின் பொருள்—ஹிருதயம் என்ற உறுப்பில் மனது என்ற இந்திரியம் இருக்கின்றது (இந்த பாகத்தால் ஹிருதயம் என்ற உறுப்பு வேறு என்றும் அதை ஆதாரமாகக்கொண்ட மனது என்ற இந்திரியம் வேறு ஒன்றும் வியக்தமாகின்றது.) அது மாம்சபிண்டம். சிகப்புத்தாமரை போன்றது. தலைகீழாகவுள்ளது. அந்த உறுப்பில்தான் யோகிகள் பரமாத்மாவைக் காணுகின்றனர். தெளிவான ரஸதாது முதலில் அந்த உறுப்பில்தான் தங்குகின்றது. பிறகு வியான வாயுவால் தள்ளப்பட்டு சரீர முழுவதும் செல்லுகின்றது. இந்த வசனத்தில் ரக்தபத்மாகாரம் என்று வெளிப்படையாகச் செந்தாமரைக்கு ஒப்பிட்டிருப்பதால் இதற்குத்தகுந்தபடி புண்டரீக பதமும் செந்தாமரையையே குறிப்பிடுமென்பது உசிதமாகின்றது. ரஸதாது அதில் தங்கி பிறகு சரீரமுழுவதும் செல்லு

கின்றது என்ற தொழிலும் நவீனர்கள் சொல்லும் Heart என்பதே ஹிருதயமென்பதைக் காட்டுகின்றது. மேலும் வியானவாயு ஹிருதயத்தை ஸ்தானமாகக் கொண்டதென "வ்யானோ ஹிருதி ஸ்தித:" என்ற வசனம் கூறுகின்றது. இந்த வசனமும் சுவாசாசயங்களை விட்டுத் தனியான ஓர் உறுப்பை ஹிருதயமெனக்காட்டுகின்றது. பிராணவாயுவைப்பற்றிச் சொல்லும்பொழுது அது மூர்த்தாவைஸ்தானமாகக் கொண்டு "உர: கண்டசர:" என்று உரஸ்ஸில் சஞ்சரிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. உதானவாயுவைப்பற்றிச் சொல்லும்பொழுது "உரஸ்தானம் உதானஸ்ய" என்று உதான வாயுவுக்கு உரஸ்ஸ்தானமெனப்படுகின்றது. "கபஸ்ய ஸூத்ராமுர" என்ற உரஸ் கபத்திற்கு முக்கியஸ்தானமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த மூன்று வசனங்களில் காணப்படும்" உரஸ்" என்ற பதம் என்ன பொருளைக் குறிக்கிறதென்பதை விமர்சம் செய்யவேண்டியதாகின்றது. உண்மையில் உரஸ் என்ற பதத்திற்குச் சரியாக அர்த்தம் விளங்காவிட்டால் ஆயுர்வேதமே விளங்காது என்பது நமது அபிப்பிராயம்.

உரஸ் என்ற பதம் சுவாசாசயங்கள் இரண்டையும் சேர்த்துச் சொல்லும் பதமாக இருக்கின்றது. தலையில் இருக்கும் பிராணவாயு உரஸ்ஸில் சஞ்சரிப்பதும் நிச்வாஸத்தைச் செய்வதும் தொழிலாகக் கொண்டுள்ளதானதால் அந்த உரஸ்சுவாசாசயமாகவேதான் இருக்கவேண்டும். அவ்விதமே உதான வாயு உரஸ்ஸை ஸ்தானமாகக் கொண்டு நாஸா என்ற நாசி துவாரங்களில் சஞ்சரிப்பதாகச் சொல்லப்பட்டிருப்பதால் உரஸ் என்பது சுவாசாசயமாகின்றது. கபத்திற்கு முக்கிய ஸ்தானமான உரஸ்ஸூம் சுவாசாசயமாகவே முடிகின்றது. க்ஷதகாஸத்தின் ஸம்பிராப்தியைச் சொல்லுமிடத்தில் "உரஸ்யந்த: க்ஷதே" என்ற வசனத்திலுள்ள உரஸ் என்ற பதத்திற்குச் சுவாசாசயங்கள் எனப்பொருள் சொல்லுவதுதான்பொருத்தமாகின்றது. சுவாஸ ஸம்பிராப்தியில் "உரஸ்த: குருதேச்வாஸம்" என்ற வசனத்தில் உரஸ் என்ற பதத்திற்குச் சுவாசாசயம் எனப் பொருளைத்தவிர வேறு பொருள் பொருந்தாது. ஆகவே க்ஷதகாசம், சுவாஸம், ஆகிய நோய்களுக்கு நிதானத்தில் சொல்லப்

படும் ஸ்தானமான உரஸ் என்பது சுவாசாசயங்கள் என்பதுதான் பொருளாகக்கொள்ள உசிதமாகின்றது. "புண்டரீகவத்" என்ற உவமை பொருந்தாமல் போய்விடுமென்ற பயமும் நிர்ஹேதுகம். உபமானம், உபமேயம், உபமாவாசகம், ஸாதர்ம்யம் என்ற இவைகள் உவமைக்கு அங்கங்களாகும். இவை பூர்ணமாக அமைந்துள்ள இடங்களில் அவை பூர்ணோபமையெனப்படும். குறைந்த இடத்தில் "லுப்தோபமை" எனப்படும். உவமைகளில் உபமானகதமான தர்மங்கள் அனைத்தும் உபமேயத்தில் எதிர்பார்ப்பது அசாத்தியம். ஏகஜாதீய வஸ்துக்களில் முழுதர்மங்களும் பொருந்துமே யன்றி விஜாதீய வஸ்துக்களில் ஸகல ஸாதர்ம்யம் அனுபபன்னமாகும். "சந்திர இவ முகம்" என்பனபோன்ற இடங்களில் ஆஹ்லாதகத்வாதி கதிபய தர்மங்கள்தான் விவக்ஷிதங்களாக முடியும். சந்திரத்வாதி விசேஷ தர்மங்கள் விவக்ஷிதங்களாக முடியாது. பிரகிருதத்தில் "ஹிருதயம் புண்டரீகவத்" என்ற உவமையில் ஸாதாரண தர்மம் என்னவென்று விமர்சித்தால் "நாளவத்வ, தளவத்வாதிகளை" ஸாதாரண தர்மங்களாக நாம் கிருஹிக்கக்கூடாது. ஏனெனில் உவமையில் சாப்தமாக ஸாதாரண தர்மம் சொல்லப்பட்டிருந்தால் அதைவிட்டு லுப்தோபமையில் போல நாம் ஒரு சாதாரண தர்மத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது. "சந்திர இவ முகமாஹ்லாதகம்" என்ற இடத்தில் ஆஹ்லாதகத்வரூபமான சாதாரண தர்மம் சாப்தமாக இருப்பதால் அந்த தர்மத்தையே அந்த உவமையின் அங்கமாகக் கொள்ளவேண்டும். அவ்விதமே கீழ்சொன்ன புண்டரீகோபமையிலும் சாப்தமான, சாதாரண தர்மத்தையே நாம் கொள்ள வேண்டும். ஶ்ருதி வசனத்தில் "ஜாக்ரதஸ்தத் விகஸதி ஸ்வபதச்ச நிமீலதி" என்று ஸங்கோச விகாஸரூபமான தர்மம் சாப்தமாக இருக்கிறது. செந்தாமரைக்கு ஸங்கோச விகாஸங்கள் இருப்பது போல ஹிருதயத்திற்கும் ஸங்கோச விகாஸங்கள் இருப்பதுபற்றி ஹிருதயம் தாமரையுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. இங்கு ஓர் கேள்வி உதிக்கின்றது. ஸங்கோச விகாசங்கள் ஸர்வபுஷ்ப சாதாரணங்கள் ஆனதால் "ஹிருதயம் புஷ்பவத்" என்று வசன வியக்தி இருக்கலாமே? அதை விட்டுப் புண்டரீகவத் என்று விசேஷிப்பானேன்? என்பதே அக்கேள்வியாகும். விழிப்பு காலத்தில் ஹிருதயம் மிருக்

கின்றது. தூக்ககாலத்தில் ஹிருதயம் சுருங்குகின்றது. என்ற வசனத்தில் விழுப்பு என்பதால் பகலும், தூக்கம் என்பதால் இரவும் உபலக்ஷிதங்களாகி பகலில் விகாஸம் இரவில் ஸங்கோசம் என்பது தாமரைப்புஷ்பத்தின் அசாதாரண தர்மங்களாகையால் இதைக்கொண்டு ஹிருதயத்தைத் தாமரையுடன் ஒப்பிடுவதுதான் ஸங்கதமாகும். இவ்விதம் அர்த்தம் செய்வது நம்முடைய சொந்த கல்பனையல்ல. அஷ்டாங்க ஸங்கிரஹத்தில்—

"திவா ப்ரபோத்யதேர்கேண ஹிருதயம் புண்டரீகவத் |
ராத்ரௌ து ஹிருதயே ம்லாநே"

எனக்காணப்படுகின்றது. புண்டரீகம் சூரியனால் பகலில்விகாஸத்தை யடைவதுபோல ஹிருதயமும் பகலில் சூரியனால் விகாசத்தையடைகின்றது என்பது இவ்வசனத்தின் பொருளாகும். மேலும் "ரக்த பத்மாகாரம்" என்று முன் உதாஹரித்த வசனத்தில்-உபமானோபமேயங்களுக்கு ஆகாரஸாம்யமும் சாப்தமாக இருக்கின்றது. ஆகவே ஆகிருதிசாம்யம், ஸங்கோசவிகாஸஸாம்யம், என்ற இந்த இரண்டு அம்சங்களைக்கொண்டே இங்கு உவமை கூறப்பட்டதாக ஏற்படுகின்றது. தளவத்வத்தை ஸாதர்ம்யமாகக் கொண்டால் சுருதஹாநாசுருதகல்பன தோஷங்கள் சம்பவிக்கும். சுவாசாசயங்களையும் சேர்த்துக்கொண்டு ஹிருதயபதம் சமஷ்டி வாசகமாகக் கொண்டாலும் புண்டரீகோபமை பொருந்த வழியில்லை. சுவாசாசயமும் ஹிருதகர்ணிகையும் சேர்ந்து புண்டரீகதளம்போல இருப்பதாகச் சொல்லமுடியாது. ஹிருதயகர்ணிகையை புண்டரீக அவயவியாகவும் இரண்டு சுவாசாசயங்களும் அதன் தளங்கள் போலிருப்பதாகவும் கூறுவது பொருந்ாது. புண்டரீக அவயவியில் பதிந்தியுள்ள தளங்கள் போல ஹிருதயகர்ணிகையில் சுவாசாசயங்கள் பொருந்தி யிருக்கக் காணவில்லை. ஆகவே ஸமஷ்டி வாசகமாகக் கொள்ளும் மதத்திலும் தளவத்வஸாம்யம்பொருந்துவதில்லை. "பத்மகோச ப்ரதீகாசம் ஹிருதயம் சாப்யதோமுகம்" என்பனபோன்ற சுருதி வசனங்களிலும் "உத்காட்யயோக கலயா ஹிருதயாப்ஜகோசம்" என்பனபோன்ற பெரியோர் வசனங்களிலும் "ஹிருத்யபேக்ஷயாது மனுஷ்யாதிகாரத்வாத்" என்பனபோன்ற ஸூத்ரங்களிலும்

அர்த்தகதியைக் கவனிக்கும்போது வியஷ்டி வாசகமாகவே காணப் படுகின்றது. "ஆதேர்முகம்" என்ற லக்ஷணம்சுவாசயந்திரங்களுக் குச்சற்றும் பொருந்துவதில்லை என்பது சர்வப் பிரத்யக்ஷம். யோ காப்பியாசத்தால் ஹிருதய கோசத்தைத் திறந்துபரமாத்ம சாக்ஷாத் காரம் செய்வதென்பது எதாவது ஓர் குறிப்பிட்ட உறுப்பில் தான் சாத்தியமாகும். மூன்று உறுப்புகளும் ஹிருதய சப்தத்திற்குப் பொருளாகில் யோகாபயியாசத்தால் மூன்று உறுப்புகளையும்திறந்து என்று பொருள் சொல்ல நேரிடும். "ஹிருதயஸ்பாவத்பதி" என்ற ஹிருதயாவதானமும் அநாதி சித்தமான ஸம்பிரதாயத்தை யொட்டி சிரௌதப்பிரயோகங்களில் குறிப்பிட்ட ஓர் உறுப்பிலே யே நடைபெறுகின்றது. அஷ்டாங்க ஹிருதயம் சாரீரம்மூன்றுவது அத்தியாயத்தில் அடியில்கண்ட வசனங்கள் காணப்படுகின்றன

ஸப்த சாதாரா: ரக்தஸ்யாத்ய: க்ரமாத் பரே |
கபாமபித்த பக்வாநாம் வாயோர் முத்ரஸ்ய சஸ்மிருதா: | |

இதன் பொருள்—சரீரத்தில் ஏழு ஆதாரங்கள் இருக்கின்றன. அவற்றுள் ரக்தத்தின் ஆதாரம் முதலில் இருக்கின்றது. அதற் கடுத்தாப்போல் வரிசையாக கபம், ஆமம், பித்தம், பக்வான்னம், வாயு, மூத்ரம், ஆகிய இவைகளின் ஆதாரங்கள் அமைந்திருக்கின் றன. ரஸ, ரக்த, தாதுக்களில் மிகுந்த வித்தியாசம் இல்லாதது பற்றி இங்கு ரசாசயத்தை ரக்தாசயம் எனக் கூறுகின்றது. அது ஹிருதயமாகும். ஹிருதயத்திற்குக்கீழ் கபாசயம். "கபஸ்ய ஸ்தாநம் உர:" என்ற ஸ்த்ரானுந்தரத்தில் சொல்லப்பட்ட உரஸ்லே கபாசயமாகும். கபாசயமென்பது இரு சுவாசப்பைகளாகின்றன. அதற்குக்கீழ் ஆமாசயம் அமைந்துள்ளது. "நாபிஸ்தநாந்தரம் ஜந்தோ ராமாசய இதி ஸ்மிருத:" என்ற சரக வசனப்படி நாபிக்கு மேலும் ஸ்தனங்களுக்குக் கீழுமுள்ள இரைப்பை ஆமாசயமாகும். அதற்குக்கீழ் பித்தாசயமும், அதற்குக்கீழ் பக்வாசயமும், அதற்குக் கீழ் அல்லது அதையொட்டி வாதாசயமும், அதற்குக்கீழ் மூத்ரா சயமென இவ்வரிசையில் ஏழு ஆசயங்கள் அமைந்துள்ளதாக இவ்வசனம் கூறுகின்றது. ரஸாசயம் அல்லது ரக்தாசயம் ஹிரு தயமாகி கபாசயம் ஹிருதயத்தைக் காட்டிலும் வேறுபட்ட உரஸ்

என்று ஸ்வாசாசயங்களாகப் பிரிக்கப்படுவதால் ரக்தாசயத்தையும் கபாசயத்தையும் வேறுபடுத்திக்காட்டும் இவ்வசனங்கள் ஹ்ருதயமும் ஸ்வாசாசயங்களும் வேறுபட்டவை எனக் காட்டுகின்றன. இவ்விதம் ஒப்புக்கொண்டால் வேறு வசனங்களுடன் முரண்பாடு உண்டாவதாகக் கூறப்படும் பாகங்களை இனி கவனிப்போம். "ஸாக்ஷிணம்" என்ற லக்ஷணம் சாக்ஷுஷப் ப்ரத்யக்ஷத்திற்கு இலக்காகுமென்று நினைக்க வழியில்லை. இது "கர்மாத்மீக ஸாக்ஷிணம் ஸாக்ஷ்யம்" என்ற உபநிஷத்தில் சொல்லப்படும் யோகி ப்ரத்யக்ஷ த்ருச்யமான பரமாத்மாதிஷ்டானஸ்தலத்தைக் குறிப்பிடுகின்றது. "யோகிநோ யத்ர பச்யந்தி" என்ற ஸ்பஷ்டமான வசனம் "ஆயுர்வேதம் மற்ற சாஸ்திரங்களுடன் தொடர்பு கொண்டு மற்ற சாஸ்திரார்த்தங்களையும் சேர்த்து போதிப்பதில் நோக்கமுள்ளது" என வியக்தமாகத் தெரிவதால் சாக்ஷுஷப் ப்ரத்யக்ஷத்தை மாத்திரம் அவலம்பித்துள்ளதல்ல ஹ்ருதய லக்ஷணத்தில் காணப்படாமல் போனது மிகவும் உசிதமே. இவ்விதமே "ஜாக்ரதஸ்தத்விகாரி," என்ற ஓர் ஸங்கோச விகாஸம் ஆயுர்வேதத்தில் சொல்லப்படுவதும் அதீந்திரியமானதே. நவீனர்களுடைய மதப்படி ஹ்ருதயத்தின் தொழிலாகக் கருதப்படும் ப்ரதி க்ஷணிக ஸங்கோச விகாஸங்கள் ப்ரத்யக்ஷத்தால் அறியக்கூடியவை. அவைகளைக்காட்டிலும் தேஹம் பூராவுமுள்ள அவிச்சின்னவிகாஸமும் அவ்விதமே ராத்திரி முழுவதும் வியாபித்துள்ள அவிச்சின்ன ஏக ரூப ஸங்கோசமும் யோகி ப்ரத்யக்ஷத்திற்கு இலக்கானவை. ஆகவே இவைகளில் உள்ள வைருப்யங்களைக்கொண்டு முரண்பாடுகளைக் கல்பித்துக்கொள்வது உசிதமல்ல. நவீனப்பிராசீனமதங்களில் ப்ரத்யக்ஷ த்ருஷ்ட ஸாரூப்யமும் அதீந்திரியார்த்தவைருப்யமும் ஸங்கதமானவைகளே.

Registered No. M. 4018.

பண்டிட் நாராயண அய்யங்கார் அவர்களின்

ருதுநல நிவாரணி

இது கைகண்ட மருந்து. கருப்பையை (கர்ப்பாசயத்தை) ஒழுங்கு செய்து ஆரோக்ய நிலைமையில் வைப்பதுடன், தீட்டு விடாய் காலங்களில் உண்டாகும் வயிற்றுவலி அதிக ரத்தப் பெருக்கு, முதலியவைகளைப் பூர்ணமாக நிறுத்தி விடுகின்றது. மற்ற மருந்துகளால் அசாத்தியமெனத் தள்ளப்பட்ட பல ருது நோய்களை நிவர்த்தி செய்து பூர்ண ஆரோக்யத்தை யளிக்கின்றது.

உபயோகிக்கும் விதம்—தினம் காலையில் 1 மாத்திரை, சாயங்காலம் 1 மாத்திரை விதம் மாத்திரையை வாயில் போட்டுக் கொண்டு வென்னீர் விட்டு விழுங்கவேண்டும். பத்தியம்—முக்கியமாக வாயு பதார்த்தங் சேராமலிருப்பது நலம்.

ஒரு மாத மருந்து விலை ரூ 10 தபால் கூலி வேறு.

விலாசம்—**பண்டிட் நாராயணய்யங்கார்**

நெ. 2. போலீஸ் ஸ்டேஷன் மேற்கு சந்து மதுரை.

ஸஹஸ்ரயோகம்.

இது மலையாள தேசத்தில் பிரசித்தமான ஓர் வடமொழி வைத்ய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. இந்நூலை யநுசரித்தே மலையாளத்தில் மருந்து முறைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்நூலில் கஷாய முறைகள் 184, கிருதமுறைகள் 70, தைலமுறைகள் 85, சூர்ண முறைகள் 89, லேகியமுறைகள் 20, குளிகைமுறைகள் 73, ஜன்னிமருந்துகள் 75, கண்ணோய்களுக்கு மருந்துகள் 92, காதுநோய்களுக்கு மருந்துகள் 6, மூக்குநோய்களுக்கு மருந்துகள் 6, முகரோக மருந்துகள் 3, தொண்டை நோய்களுக்கு மருந்துகள் 6, உள்வாய் ரோகங்களுக்கு மருந்துகள் 5, பலவகை மருந்துகள் 153 ஆக இவ்விதம் மொத்தம் 867 மருந்துகள் விபரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த ஒரு நூலே வைத்யர்களுடைய தேவைக்குப் போதுமானது. புத்தகம் விலை ரூ. 1 தபால் கூலி வேறு.

கிடைக்குமிடம்—பண்டிட் நாராயணய்யங்கார்

நெ. 2, போலீஸ் ஸ்டேஷன் மேற்கு சந்து மதுரை.

வெங்கடேஸ்வர் பிரஸ் காக்காத்தோப்புத்தெரு, மதுரை—42.

(1)	(2)	(1)	(2)